**வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 130 (III)**

2009 டிசம்பர் 08

**சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்,**

**மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும்**

**திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்**

**வங்கிகள் மூலம் சொத்துக்கடன்கள் வழங்கல் -**

**கணக்கு வைப்பிற்கான அறிவுறுத்தல்கள்**

2009.11.18 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 15/2007(1) கொண்ட சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம், சொத்துக்கடன்கள், வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்வதற்காக தற்போது இத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2006.06.28 ஆம் திகதிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 130, 2007.02.14 ஆம் திகதிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 130(I) மற்றும் 2007.06.29 ஆம் திகதிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 130(II) ஆகிய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டு அறிவுரைகளுக்கு மேலதிகமாக கீழ் காணும் கணக்கீட்டு அறிவுரைகள் 2009.11.01 ஆம் திகதி தொடக்கம் பின்பற்றப்படவேண்டுமென்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படும் வட்டி.

(அ) 2007.06.15 ஆம் திகதிக்கு முன்னர் அரச ஊழியர்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்ட முழுமையான கடன் தொகை அல்லது கடன் தொகையில் வழங்கப்பட்ட ஒரு பகுதி தொடர்பாக அக்கடன் தொகையினை செலுத்தி முடிக்கும்வரை ஊழியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய வட்டி, 2005.03.31 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 8/2005 மற்றும் அதற்குச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களுக்கும் மற்றும் தேசிய வரவுசெலவுத் திணைக்களத்தின் 2006.06.08 ஆம் திகதிய தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 130 க்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2007.06.15 ஆம் திகதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகையின் ஒரு பகுதி பெற்றுக் கொள்ளப்பட்டு அக்கடன் தொகையின் எஞ்சியுள்ள பகுதி 2007.06.15 ஆம் திகதி மற்றும் 2009.10.31 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பின், அக்கடன் பகுதிக்காக ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் வட்டி 2007.06.12 ஆம் திகதிய அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 15/2007 இல் 1.2.2 ஆம் வாசகத்திற்கும் தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தின் 2007.06.29 ஆம் திகதிய தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல: 130(II) 1 ஆம் பந்திக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(இ) 2009.11.01 ஆம் திகதி தொடக்கம் அரசாங்க ஊழியர்களுக்கு வங்கியிலிருந்து விடுவிக்கப்பட்ட மொத்த கடன் தொகை அல்லது கடன் தொகையின் விடுவிக்கப்பட்ட பகுதிக்காக அந்தக் கடன் தொகைகள் செலுத்திமுடியும் வரை, ஊழியர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய வட்டி, 2009.11.18 ஆம் திகதிய அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 15/2007(I) இன் 1.2 இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கடன் வட்டி தீர்மானித்தல் எனும் பந்திக்கும் இச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்.

2. மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் கீழ் அரசாங்க ஊழியர்களுக்கு சொத்துக் கடன்கள், வங்கிகள் மூலம் வழங்கும் முறைமை ஆரம்பம் தொட்டு இதுவரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் பெற்றுக்கொள்ளப்படும் சகல கடன் தொகை அல்லது கடன் தொகைகளின் பகுதிகளுக்கான அவர்.'.அவளினால் செலுத்தப்பட வேண்டிய வட்டியைத் தீர்மானித்தல் மற்றும் அரசாங்கத்தினால் செலுத்தப்படவேண்டிய வட்டி நிவாரண உதவி தீர்மானிக்கப்படும்போது அந்த சகல கடன் பகுதிகளும் ஒரே கடன் தொகையாக கவனத்திற் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் பிரகாரம் அரசாங்க ஊழியர்களினால் வங்கிகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படும் சொத்துக் கடன்களுக்கான வட்டி கணக்கிடப்பட வேண்டிய முறை பற்றிய சில உதாரணங்கள் இச்சுற்றறிக்கையின் அட்டவணை இல: 1 இல் காண்பிக்கப்பட்டுள்ளது.

3. வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டிய வட்டி:

2009.11.18 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 15/2007 (I) இன் 1.2 ஆம் பந்தி மற்றும் 02(II) ஆம் பந்தியின் பிரகாரம்:

(அ) 2007.06.15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கியினால் சொத்துக்கடன்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகைகளுக்கு உரித்துடைய வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டிய வருடாந்த வட்டி விகிதம் ஆகிய 11% மேலும் மாற்றப்படாமல் இருக்கும்.

(ஆ) 2007.06.15 ஆம் திகதி தொடக்கம் 2009.10.31 ஆம் திகதிவரை வங்கியினால் சொத்துக் கடன்களுக்காக விடுவிக்கப்பட்ட கடன் தொகைகளுக்கு உரித்துடையதாக வங்கிகளுக்கு செலுத்தப்படவேண்டிய வட்டி விகிதம் 14.5% மாக இருக்கும்.

(இ) அரசாங்க ஊழியரொருவர்;

(i) 2007.06.15 ஆம் திகதிக்கு முன்னர்
(ii) 2007.06.15 ஆம் திகதி தொடக்கம் 2009.10.31 வரை
(iii) 2009.11.01 ஆம் திகதி தொடக்கத்திலிருந்து பெறுவனவாகிய.

மொத்தக் கடன் தொகை பகுதிகளாக வங்கியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கு மாயின்/எதிர்காலத்தில் விடுவிக்கப்படுமாயின் அந்த ஒவ்வொன்றினதும் காலப் பகுதிகளுக்கு உரித்துடையதாக வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய வட்டி விகிதங்கள் ஒன்றுக்கொன்று மாறுபடுமாகையினால் (முறையே 11%, 14.5%, 12% அல்லது 14%) அந்தந்தக் காலப்பகுதிக்கு அமைவாக ஒரே கடன் தொகை அல்லது சில கடன் தொகைகளாக கவனத்திற்கு கொள்ளப்பட்டு வங்கியினால் அறவிடப்படும் கடன் தவணைப் பணங்கள் பற்றிய விபரம் வெவ்வேறாக பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறே அக்கடன் தவணைப்பணம் தீர்வு செய்யப்படும்போது வங்கியினால் தரப்படும் அறிவுரைகளின் பிரகாரம் தீர்வு செய்யப்படவேண்டும் என்பதுடன் இச்சுற்றறிக்கையின் அட்டவணை 1க்கு அமைவாக வட்டி கணக்கிடப்படல் வேண்டும்.

4. கடன்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட காலம் மற்றும் மேற்கூறப்பட்ட அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் பிரகாரம், உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படும் வட்டி, அரசாங்கத்தினால் செலுத்தப்படும் வட்டி நிவாரண உதவி மற்றும் வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய வட்டி விகிதம் கீழே அட்டவணையில் சுருக்கிக் காண்பிக்கப்பட்டுள்ளது.

| கடன் விடுவிக்கப்பட்ட திகதி | கடன் தொகை | கடன் வட்டி விகிதம் | | வங்கிக்கு செலுத்தவேண்டிய வட்டி விகிதம் |
|---|---|---|---|---|
| | | ஊழியர் | அரசாங்கம் | |
| 2007.06.15 இக்கு முன்னர் | சகல கடன் தொகைகளுக்கும் | 4% | 7% | 11% |
| 2007.06.15 தொடக்கம் 2009.10.31 வரை | (1) ரூ.500,000 வரை | 4% | 10.5% | 14.5% |
| | (2) ரூ.500,001 தொடக்கம் ரூ.1,000,000 வரை | 8% | 6.5% | 14.5% |
| | (3) ரூ,1,000,001 தொடக்கம் ரூ.3,000,000 வரை | 11% | 3.5% | 14.5% |
| 2009.11.01 தொடக்கம் | (1) ரூ.500,000 வரை | 4% | 8% | 12% |
| | (2) ரூ.500,001 தொடக்கம் ரூ.1,000,000 வரை | 8% | 4% | 12% |
| | (3) ரூ,1,000,001 தொடக்கம் ரூ.3,000,000 வரை | 11% | 3% | 14% |

5. இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விடுவிக்கப்படக்கூடிய கடன்களுக்கு உரித்துடைய தவணைப் பணம் மற்றும் அதற்குரித்துடைய வட்டி பற்றிய விபரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் கணக்கு வைத்தல்:

(அ) ஊழியரினால் செலுத்தப்படவேண்டிய வட்டி மற்றும் அரசாங்கத்தினால் செலுத்தப்படவேண்டிய வட்டி நிவாரண உதவி ஆகியவற்றைக் கணக்கிடுவதற்காக, வங்கியினால் கடன் விடுவிக்கப்பட்ட உடனேயே மற்றும் அதன் பின்னர் சகல வருடங்களிலும் ஜனவரி மாதத்திற்கு முன்னர் உரித்துடைய ஆண்டிற்கான இச்சுற்றறிக்கையின் II ஆம் அட்டவணையின் பிரகாரம் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

(ஆ) மேலே 5(அ) இற்கு உரித்துடைய கணக்கிடல்களுக்காக:

(i) 2005.04.01 ஆம் திகதி தொடக்கம் 2007.06.14 ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்ட கடன்களுக்காக இச்சுற்றறிக்கையின் அட்டவணை II (அ)

(ii) 2007.06.15 ஆம் திகதி தொடக்கம் 2009.10.31 ஆம் திகதி வரை விடுவிக்கப்பட்ட கடன்களுக்காக இச்சுற்றறிக்கையின் அட்டவணை II (ஆ)

(iii) 2009.11.01 ஆம் திகதி தொடக்கம் எதிர்காலத்தில் விடுவிக்கப்படும் கடன்களுக்காக இச்சுற்றறிக்கையின் அட்டவணை II (இ) பயன்படுத்தப்படல் வேண்டும்

(iv) ஏதேனும் சொத்துக்கடன் பெறுபவரின் மொத்தக்கடன், மேலே காண்பிக்கப்பட்டுள்ள காலப் பகுதி ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கு உரித்துடையதாயின் இச்சுற்றறிக்கையின் அட்டவணை II (ஈ) மூலம் மேலே தகவல்கள் சுருக்கிக் காண்பிக்கப்படல் வேண்டும்.

(இ) இச்சுற்றறிக்கையின் அட்டவணை இல. II இற்கு அமைவாக வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்கள் மீது 2007.06.12 ஆம் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல. 15/2007 இன் 1.2.2 மற்றும் 1.3 ஆம் வாசகங்களுக்கு அமைவாக மற்றும் இச்சுற்றறிக்கையின் Iஆம் பந்தியின் (அ) (ஆ) மற்றும் (இ) வாசகங்களுக்கு அமைவாக

அரசாங்கத்தினால் செலுத்தப்படவேண்டிய வட்டி நிவாரண உதவி, ஊழியரிடமிருந்து அறவிடப்படவேண்டிய வட்டி மற்றும் வங்கிக்கு செலுத்தப்படவேண்டிய தவணைப்பணத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளல் மற்றும் உரித்துடைய வங்கிக் கிளைக்கு அதன் அடுத்துவரும் மாதத்தில் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் விடயப் பொறுப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

(ஈ) உரிய காலப்பகுதியில் கடன் தவணைக் கட்டணம் மற்றும் வட்டி வங்கிகளுக்கு செலுத்தப்படாமையினால் வட்டிக்குத் தண்டம் அறவிடுவதற்கு வங்கியினால் நடவடிக்கை எடுக்கப்படக்கூடுமாகையால், தவணைக் கட்டணம் மற்றும் வட்டி வங்கிக்கு செலுத்துவதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும். ஊழியர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படும் வங்கிக்கடன் தவணைப் பணம் அடுத்துவரும் மாதத்தின் 05 ஆம் திகதிக்கு முன்னர் வங்கிக்கு கிடைக்கக்கூடிய வகையில் காசோலைகள் தபாலில் இடப்படவேண்டுமென்பதுடன், ஏதேனும் காரணத்தினால் கடன் தவணைப்பணம் தாமதத்தின்மீது கடன் பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து வங்கியினால் தண்டப் பணம் அறவிடப்பட்டால், அதுபற்றி 2006.06.28 ஆம் திகதியுடைய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 130 இன் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(உ) இந்த விடயம் சம்பந்தமாக தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2006.06.28 ஆம் திகதியுடைய வரவுசெலவு திட்ட சுற்றறிக்கை இல. 130, 2007.02.14 ஆம் திகதியுடைய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 130(I) மற்றும் 2007.06.29 ஆம் திகதியுடைய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 130(II) ஆகிய சுற்றறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக இச்சுற்றறிக்கையிலும் அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்குமிடத்து அந்த அறிவுரைகள் மட்டும் மேலே காண்பிக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை அறிவுரைகளை விஞ்சுமென்பது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. இச்சுற்றறிக்கையின் அறிவுரைகள் நடைமுறைப்படுத்தப்படும்போது ஏதேனும் நடைமுறைச் சிக்கல்கள் இருப்பின், தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அதுபற்றி எழுத்துமூல அறிவுரைகள் பெற்றுக்கொள்ளப் படல் வேண்டும்.

ஒப்பம். சுதர்மா கருணாரத்ன

வரவுசெலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம்

பிரதிகள்:

1. செயலாளர், அரசாங்க நிருவாக, உள்நாட்டு அலுவல்கள அமைச்சு
2. பணிப்பாளர் நாயகம், அரச கணக்குகள் திணைக்களம்
3. பொது முகாமையாளர், மக்கள் வங்கி
4. பொது முகாமையாளர், இலங்கை வங்கி
5. பொது முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி
6. பொது முகாமையாளர், வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டுத்தாபனம்
7. பொது முகாமையாளர், அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி
8. கணக்காய்வாளர் நாயகம்

| உதாரணம் | வங்கி அங்கீகரித்த மொத்த கடன் தொகை<br>ரூ. | 2007.06.15 க்கு முன்னர் விடுவிக்கப் பட்ட கடன் தொகை<br>ரூ. | 2007.06.15 மற்றும் 2009.10.31 இடைப்பட்ட காலத்தில் விடுவிக்கப் பட்ட கடன் தொகை<br>ரூ. | 2009.11.01 க்குப் பின்னர் விடுவிக்கப் பட்ட கடன் தொகை<br>ரூ. | கடன் வட்டி கணக்கிடப்படும் கடன் தொகை<br>ரூ. | 2007.06.15 க்கு முன்னர் பெற்றுக் கொண்ட கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி வீதம் | | 2007.06.15 மற்றும் 2009.10.31 க்கும் இடையே காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களுக்கு அறவிடும் வட்டி வீதம் | | 2009.11.01 தொடக்கம் அறவிடப்படும் வட்டி வீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஊழியர் | அரசு | ஊழியர் | அரசு | ஊழியர் | அரசு |
| 1 | 1,350,000 | 350,000 | 1,000,000 | | (1) 2007/6/15 க்கு முன்னர் விடுவிக்கப்பட்ட 350,000 க்காக | 4% | 7% | | | | |
| | | | | | (2) முதல் 500,000 இருந்து மீதி 150,000/- க்காக | | | 4% | 10.5% | | |
| | | | | | (3) இரண்டாம் 500,000/- க்காக | | | 8% | 6.5% | | |
| | | | | | (4) எஞ்சிய 350,000/- க்காக | | | 11% | 3.5% | | |
| 2 | 1,400,000 | 650,000 | 750,000 | | (1) 2007/6/15 க்கு முன்னர் வீடுவிக்கப்பட்ட 650,000 க்காக | 4% | 7% | | | | |
| | | | | | (2) 650,000 முதல் 1,000,000 வரை 350,000 க்காக | | | 8% | 6.5% | | |
| | | | | | (3) எஞ்சிய 400,000/- க்காக | | | 11% | 3.5% | | |
| 3 | 900,000 | 300,000 | 300,000 | 300,000 | (1) 2007/6/15 க்கு முன்னர் விடுவிக்கப்பட்ட 300,000/- க்காக | 4% | 7% | | | | |
| | | | | | (2) இரண்டாம் 300,000/- மற்றும் 200,000/- க்காக | | | 4% | 10.5% | | |
| | | | | | (3) எஞ்சிய 100,000/- க்காக | | | 8% | 6.5% | | |
| | | | | | (4) இறுதி 300,000/- க்காக | | | | | 8% | 4% |
| 4 | 1,200,000 | | 500,000 | 700,000 | (1) முதல் 500,000/- வரை | | | 4% | 10.5% | | |
| | | | | | (2) இரண்டாம் 500,000/- ரூ 1,000,000/- க்காக | | | | | 8% | 4% |
| | | | | | (3) 1,000,001/-- மேலதிக மீதி 200,000/- க்காக | | | | | 11% | 3% |
| 5 | 1,200,000 | 500,000 | 500,000 | 200,000 | (1) 2007/6/15 க்கு முன்னர் விடுவிக்கப்பட்ட 500,000 க்காக | 4% | 7% | | | | |
| | | | | | (2) இரண்டாம் 500,000 முதல் 1,000,000/- வரை | | | 8% | 6.5% | | |
| | | | | | (3) 1,000,001/- மேலதிக மீதி 200,000/- க்காக | | | | | 11% | 3% |

**கடன் தவணைக் கட்டணம் மற்றும் வட்டி அறவிடல் பற்றிய மாதாந்த விபரம்** **அட்டவணை: II (a)**

(2005.04.01 முதல் 2007.06.14 வரை விடுவிக்கப்பட்ட கடன் தொகைகளுக்கு உரித்துடையதாகும்)

.. (முகவரி)

1. உத்தியோகத்தரின் பெயர் : ..
2. பதவி : .
3. அடையாள அட்டை இலக்கம்: ..
4. சேவை இடத்தின் முகவரி :
5. கடன் உரிமை இலக்கம் : ..
6. வழங்கப்பட்ட கடன் தொகை : ரூ.
7. கடன் விடுவிக்கப்பட்ட திகதி : ..

(ரூபாய்)

| வருடம் | மாதம் B | **கடன் தொகைக்கு அறவிடப்படும் தவணைக் கட்டணம்** C | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டி 4% D | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டியும் மொத்த தவணைக் கட்டணம் (C+ D) E | அரசினால் செலுத்தப்படும் வட்டி 7% F | வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த வட்டி (D+F) G | வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த தவணைக் கட்டணம் (C+G) H |
|---|---|---|---|---|---|---|---|
| | சனவரி | | | | | | |
| | பெப்ரவரி | | | | | | |
| | மார்ச் | | | | | | |
| | ஏப்ரல் | | | | | | |
| | மே | | | | | | |
| | ஜூன் | | | | | | |
| | ஜூலை | | | | | | |
| | ஆகஸ்ட் | | | | | | |
| | செப்டம்பர் | | | | | | |
| | ஒக்டோபர் | | | | | | |
| | நவம்பர் | | | | | | |
| | டிசம்பர் | | | | | | |

**கடன் தவணைக்கட்டணம் மற்றும் வட்டி அறவிடல் பற்றிய மாதாந்த விபரம்** **அட்டவணை: II (b)**

(2007.06.15 முதல் 2009.10.31 வரை விடுவிக்கப்பட்ட கடன் தொகைகளுக்கு உரித்துடையதாகும்

.
. (முகவரி)

1. அலுவலரின் பெயர் : .
2. பதவி : . .
3. அடையாள அட்டை இலக்கம்: .
4. சேவை இடத்தின் முகவரி :
5. கடன் உரிமை இலக்கம் : ..
6. வழங்கப்பட்ட கடன் தொகை : ரூ.
7. கடன் விடுவிக்கப்பட்ட திகதி : .

(ரூபாய்)

| வருடம் **A** | மாதம் **B** | கடன் தொகைக்கு அறவிடப்படும் தவணைக் கட்டணம் **C** | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டி **D** | | | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் மொத்த வட்டி **E** $(D_1 + D_2 + D_3)$ | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டியுடனான மொத்த தவணைக் கட்டணம் **F** (C+ E) | அரசினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி **G** | | | அரசினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி **H** $(G_1 + G_2 + G_3)$ | வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி **I** (E+H) | வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த கடன் தவணைக்கட்டணம் **J** (C+I) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4% $D_1$ | 8% $D_2$ | 11% $D_3$ | | | 10.5% $G_1$ | 6.5% $G_2$ | 3.5% $G_3$ | | | |
| | சனவரி | | | | | | | | | | | | |
| | பெப்ரவரி | | | | | | | | | | | | |
| | மார்ச் | | | | | | | | | | | | |
| | ஏப்ரல் | | | | | | | | | | | | |
| | மே | | | | | | | | | | | | |
| | ஜூன் | | | | | | | | | | | | |
| | ஜூலை | | | | | | | | | | | | |
| | ஆகஸ்ட் | | | | | | | | | | | | |
| | செப்டம்பர் | | | | | | | | | | | | |
| | ஒக்டோபர் | | | | | | | | | | | | |
| | நவம்பர் | | | | | | | | | | | | |
| | டிசம்பர் | | | | | | | | | | | | |

**கடன் தவணைக்கட்டணம் மற்றும் வட்டி அறவிடல் பற்றிய மாதாந்த விபரம்** **அட்டவணை: II (c)**

(2009.11.01 முதல் விடுவிக்கப்பட்ட கடன் தொகைகளுக்கு உரித்துடையதாகும்)

.. (முகவரி)

1. அலுவலரின் பெயர் : ..
2. பதவி : .
3. அடையாள அட்டை இலக்கம்: ..
5. சேவை இடத்தின் முகவரி :

5. கடன் உரிமை இலக்கம் : ..
6. வழங்கப்பட்ட கடன் தொகை : ரூ.
7. கடன் விடுவிக்கப்பட்ட திகதி : .

(ரூபாய்)

| வருடம் **A** | மாதம் **B** | கடன் தொகைக்கு அறவிடப்படும் தவணைக் கட்டணம் **C** | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டி **D** | | | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் மொத்த வட்டி **E** ($D_1$ +$D_2$ +$D_3$ ) | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டியுடனான மொத்த தவணைகள் **F** (C+ E) | அரசினால் செலுத்தப்பட வேண்டிய வட்டி **G** | | | அரசினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி **H** ($G_1$ +$G_2$ +$G_3$) | வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி **I** (E+H) | வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த கடன் தவணைக்கட்டணம் **J** (C+I) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4% $D_1$ | 8% $D_2$ | 11% $D_3$ | | | 8% $G_1$ | 4% $G_2$ | 3% $G_3$ | | | |
| | சனவரி | | | | | | | | | | | | |
| | பெப்ரவரி | | | | | | | | | | | | |
| | மார்ச் | | | | | | | | | | | | |
| | ஏப்ரல் | | | | | | | | | | | | |
| | மே | | | | | | | | | | | | |
| | ஜூன் | | | | | | | | | | | | |
| | ஜூலை | | | | | | | | | | | | |
| | ஆகஸ்ட் | | | | | | | | | | | | |
| | செப்டம்பர் | | | | | | | | | | | | |
| | ஒக்டோபர் | | | | | | | | | | | | |
| | நவம்பர் | | | | | | | | | | | | |
| | டிசம்பர் | | | | | | | | | | | | |

**கடன் தவணைக்கட்டணம் மற்றும் வட்டி அறவிடல் பற்றிய மாதாந்த விபரம்** **அட்டவணை: II (d)**

(மேல் அட்டவணையின் II a, b மற்றும் c இன் சுருக்கம்

.. (முகவரி)

1. அலுவலரின் பெயர் : ..
2. பதவி : .
3. அடையாள அட்டை இலக்கம்: ..
4. சேவை இடத்தின் முகவரி : .
5. கடன் உரிமை இலக்கம் ..
6. வழங்கப்பட்ட கடன் தொகை : ரூ.
(உரியவாறு அட்டவணையின் II a, b மற்றும் c இன் மொத்தம்)
7. கடன் விடுவிக்கப்பட்ட திகதி:

(ரூபாய்)

| வருடம் A | மாதம் B | கடன் தொகைக்கு அறவிடப்படும் தவணைகள் C | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டி (உரியவாறு அட்டவணையின் II a, b மற்றும் c இன் மொத்தம்) D | ஊழியரிடமிருந்து அறவிடப்படும் வட்டியுடனான மொத்த தவணைகள் E (C+ D) | அரசினால் செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி (உரியவாறு அட்டவணையின் II a, b மற்றும் c இன் மொத்தம்) F | வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டி G (D+F) | வங்கிக்கு செலுத்த வேண்டிய மொத்த கடன் தவணைக்க கட்டணம H (C+G) |
|---|---|---|---|---|---|---|---|
| | சனவரி | | | | | | |
| | பெப்ரவரி | | | | | | |
| | மார்ச் | | | | | | |
| | ஏப்ரல் | | | | | | |
| | மே | | | | | | |
| | ஜூன் | | | | | | |
| | ஜூலை | | | | | | |
| | ஆகஸ்ட் | | | | | | |
| | செப்டம்பர் | | | | | | |
| | ஒக்டோபர் | | | | | | |
| | நவம்பர் | | | | | | |
| | டிசம்பர் | | | | | | |